lic domain. Digitization Muthulakshmi Research Aca

உ

திருச்சிற்றம்பலம்

நவ கைலாசம்

தொகுத்தவர் :

இரா. ஆவுடையப்பன் அவர்கள்,
(செயலர், அறுபத்து மூவர் குருபூஜைக் குழு,
சங்கரன்கோவில்.)

திருமண அன்பளிப்பு

திருமுறை மன்றம்,
சங்கரன்கோவில்.

lic domain. Digitization Muthulakshmi Research Ac

உ
ஸ்ரீ ஆத்தியடி விநாயகர் துணை

நவ கைலாசம்

மணமகன் :

செல்வச் சிரஞ்சீவி : **மு. ப. விநாயக**ற்கு
(த/பெ சிவஸ்ரீ மு பழனிவேல் முதலியார்,
திருவள்ளுவர் நகர், சங்கரன்கோவில்)

மணமகள் :

ஸௌபாக்யவதி : **சுப்புலட்சுமி**யை
(த/பெ. சிவஸ்ரீ சு. சுப்பிரமணியம் என்ற
செல்லையா முதலியார், சங்கரன்கோவில்.)

பெரியோர்கள், ஸ்ரீபவ ஷு ஆவணி மீ 22-ஆம் நாள் (7—9—94) புதன்கிழமையன்று திருமணம் செய்வித்தபொழுது மணமக்களை வாழ்த்தியும், மணமக்கள் சைவ வாழ்வு பெற ஸ்ரீ கோமதி ஸமேத ஸ்ரீ சங்கரலிங்க மூர்த்தியைப் பிரார்த்தித்தும் சங்கரன்கோவில், திருமுறை மன்றத்தார் வழங்கிய

திருமண அன்பளிப்பு

நன்கொடையாளர் :

சிவஸ்ரீ மு. பழனிவேல் முதலியார் அவர்கள்,
(தலைவர் ஸ்ரீ ஆத்தியடி விநாயகர் வார வழிபாட்டுக் குழு)

திருமுறை மன்றம்,

சங்கரன்கோவில்.

7–9–94

lic domain. Digitization Muthulakshmi Research Ac

உ
திருச்சிற்றம்பலம்

ஒன்று கேண்மின்

சைவ நன்மக்களே, வணக்கம். எங்கள் மன்ற உறுப்பினர் மு. ப. விநாயகற்கு ஸௌ. சுப்புலட்சுமியை பெரியோர்கள் இன்று திருமணம் செய்விக்கிறார்கள். அவர்கள் கல்யாண வைபவத்தில் நவ கைலாசம் என்னும் இச்சிறு புத்தகத்தை எங்கள் மன்றம் வெளியிடுவதில் பெருமையடைகிறது இவ்வரிய விஷயங்களைத் தொகுத்தளித்தவர் சங்கரன்கோவில், அறுபத்து மூவர் குருபூஜைக் குழுவின் செயலர் சிவஸ்ரீ இரா. ஆவுடையப்பன் அவர்கள். இப்பிரசுரம் வெளியாதற்கு நன்கொடை நல்கியவர் ஸ்ரீ ஆத்தியடி விநாயகர் வார வழிபாட்டுக் குழுத் தலைவர் சிவஸ்ரீ மு பழனிவேல் முதலியார் அவர்கள். இவ்விருவர்க்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி இப்பிரசுரம் வெளியாவதற்குப் பலவகையானும் ஊக்கம் தந்தவர்கள் எங்கள் ஆசிரியப் பெருந்தகை வித்துவான் ச இரத்நவேலன் அவர்கள்.

இச்சிறு நூற்கு அச்சுப்பிழை ஏற்படாவண்ணம் பிழை திருத்தம் செய்தவர்கள் நெல்லை சிவஸ்ரீ சிவ. காந்தி B.A. அவர்கள். இந் நூலை நெல்லை ஸ்ரீ முத்துலெட்சுமி அச்சகத்தார் அச்சிட்டு உதவினார்கள். யாவர்க்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

நவகைலாசத்தையும் சைவமக்கள் வருடம் ஒருமுறையேனும் சென்று தரிசிக்க வேண்டுமென்பதே எங்கள் பணிவான விண்ணப்பம்.

திருமுறை மன்றத்தார்,
சங்கரன்கோவில்.

lic domain. Digitization Muthulakshmi Research Ac

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க

நவ கைலாசம்

பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரி யான்என்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை.

—பெரியபுராணம்

இமயமலையிலுள்ள திருக்கயிலைத் திருக்கோயிலில் கையில் மான் மழுவோடும் சடையில் கங்கை பிறைச்சந்திரனாகிய கண்ணியோடும் ஐயராகிய சிவபெருமான் உமையன்னையோடும் என்றும் வீற்றிருந்தருள்கின்றார். நான்முகன் திருமால் இந்திரன் முதலிய தேவர்களேயன்றி பூத வேதாளப் பெருங்கணநாதர்களும் போற்றித் திருக்கயிலையை வணங்கித் துதிக்கின்றனர். மாந்தர் செல்லுதற்கரியது திருக்கயிலை. சென்றோர் எனப்படுவாரெல்லாம் சேய்மையில் நின்றே திருக்கயிலையைத் தரிசித்தனர். அதனால் கயிலைத் திருக்கோயில் நாடெங்கும் தோன்றின. அவற்றுள் தாம்பிரபன்னி நதிக்கரையில் கைலாய நாதர் திருக்கோயில் ஒன்பது உண்டு. அவை "நவ கைலாசம்" என்றழைக்கப்படும், அந்நவகைலாசங்களைச் சென்று தரிசிக்க விரும்புவோர் பலர் அவர்க்குத் துணையாகக் கீழ்க்கண்ட குறிப்புகளை வழங்குகிறோம்.

நவ கைலாசங்களுக்கும் தாம்ரபன்னியே தீர்த்த கட்டம். எல்லாக் கோயில்களிலும் எழுந்தருளி அருள் தருபவர் ஸ்ரீ கைலாச நாதரே.

1. பாபவிநாசம்

சுவாமி திருநாமம்	:	ஸ்ரீ முக்களாலிங்கர் என்ற கைலாசநாதர்
அம்மை திருநாமம்	:	ஸ்ரீ உலகம்மை
ஸ்தலவிருக்ஷம்	:	முக்களா

lic domain. Digitization Muthulakshmi Research Ac

மார்க்கம்	:	நெல்லையிலிருந்து 45 கி.மீ. மேற்கே பொதியமலை அடிவாரத்தில் உள்ளது. தாமிரபன்னி தரையிறங்குமிடம். வடநாட்டு ஹரித்துவார் போலத் தென்னாட்டில் பாபவிநாசம்.
பொது	:	முக்களாலிங்கர் இயற்றிய ஸ்தலபுராணம், நமச்சிவாயக் கவிராயர் இயற்றிய பலபிரபந்தங்கள் இந்த ஸ்தலம் பற்றியன.

2. சேரன்மகாதேவி

சுவாமி திருநாமம்	:	ஸ்ரீ அம்மைநாத சுவாமி என்ற கைலாசநாதர்
அம்மை திருநாமம்	:	ஸ்ரீ ஆவுடைநாயகி
ஸ்தலவிருக்ஷம்	:	ஆலமரம்
மார்க்கம்	:	நெல்லையிலிருந்து அம்பை. பாபவிநாசம் செல்லும் சாலை மத்தியில் உள்ளது. அடிக்கடி இவ்வூருக்கு டவுண் பஸ் வசதி உள்ளது. ரயில் பாலத்தின் அருகே ஆற்றின் தென்கரையில் உள்ளது.

3 கோடகநல்லூர்

சுவாமி திருநாமம்	:	ஸ்ரீ கைலாச நாதர்
அம்மை திருநாமம்	:	ஸ்ரீ சிவகாமி அம்மை
மார்க்கம்	:	திருநெல்வேலி - சேரன்மஹாதேவி சாலையில் உள்ள நடுக்கல்லூாக்குத் தெற்கே 1 கி.மீ. தூரத்தில் தாமிர பன்னி ஆற்றுக்கரையிலிருப்பது இவ்வூர். அடிக்கடி டவுண் பஸ் இவ்வூருக்கு உண்டு.

lic domain. Digitization Muthulakshmi Research Ac

4. குன்னத்தூர்
(கீழத்திருவேங்கடநாதபுரம்)

சுவாமி திருநாமம் : ஸ்ரீ கோதை பரமேஸ்வரன் என்ற கைலாசநாதர்

அம்மை திருநாமம் : ஸ்ரீ சிவகாம சுந்தரி

மார்க்கம் : நெல்லையிலிருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ளது. டவுண் பஸ் செல்கிறது. தாமிரபன்னியாறு கோவிலுக்குத் தெற்கே 1 கி.மீ. தொலைவிலுள்ளது.

5. முரப்பநாடு

சுவாமி திருநாமம் : ஸ்ரீ கைலாச நாதர்

அம்மை திருநாமம் : ஸ்ரீ சிவகாம சுந்தரி

மார்க்கம் : திருநெல்வேலி - தூத்துக்குடிச் சாலையில் 17-வது கி.மீ. இல் உள்ளது. கலியாவூர், வல்லநாடு செல்லும் டவுண் பஸ் இங்குச் செல்லும். பஸ் நிலையத்தில் இறங்கி 1 கி.மீ. உள்ளே போக வேண்டும். இங்கு தாமிரபன்னியாறு உத்தரவாகினியாகச் செல்வதால் தட்சிண கங்கை என அழைக்கப்படுகிறது.

6. ஸ்ரீவைகுண்டம் என்னும் கைலாசபுரம்

சுவாமி திருநாமம் : ஸ்ரீ கைலாசநாதர்

அம்மை திருநாமம் : ஸ்ரீ சிவகாமி அம்மை

மார்க்கம் : திருநெல்வேலி - திருச்செந்தூர் சாலையில் 30-வது கி.மீ. தொலைவில் உள்ளது. பெரிய ஊர். ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் அவதார க்ஷேத்திரம்.

7. தென்திருப்பேரை

சுவாமி திருநாமம் : ஸ்ரீ கைலாச நாதர்

அம்மை திருநாமம் : ஸ்ரீ அழகிய பொன்னம்மாள்

lic domain. Digitization Muthulakshmi Research Ac

மார்க்கம் : திருநெல்வேலி - திருச்செந்தூர் சாலையில் 38-வது கி.மீ. இல் உள்ளது. பஸ் நிற்குமிடத்திலிருந்து 1 கி. மீ. வடக்கே சென்ருல் திருக்கோயிலைக் காணலாம். பேரெயில் என்பது பேரை என மருவித் தெற்கில் உள்ளமை காட்டத் தென்திருப்பேரை எனப்பெயர் பெற்றது.

8. ராஜபதி

சுவாமி திருநாமம் : ஸ்ரீ கைலாச நாதர்

அம்மை திருநாமம் : அழகிய பொன்னம்மாள் என்ற சிவகாமியம்மை

பொது : தென்திருப்பேரையை அடுத்து மணத்தி என்ற ஊருக்கு வடக்கே 1 கி. மீ இல் ராஜபதி உள்ளது. கோயில் ஆற்று வெள்ளத்தால் அடியுண்டு மறைந்து விட்டதாகக் கூறுகின்றனர்.

9. சேர்ந்தமங்கலம் என்ற சேர்ந்தபூமங்கலம்

சுவாமி திருநாமம் : ஸ்ரீ கைலாசநாதர்

அம்மை திருநாமம் : ஸ்ரீ அழகிய பொன்னம்மாள் என்ற சிவகாமியம்மை

மார்க்கம் : திருநெல்வேலி - ஆத்தூர் சென்று அங்குகிந்து 3 கி. மீ. இல் உள்ளது சேர்ந்தமங்கலம். நெல்லை - புன்னக்காயல் பஸ்ஸில் சென்று சேர்ந்தமங்கலத்திலேயே இறங்கிக் கோயிலை அடையலாம்.

சைவமக்கள் இந்த நவ கைலாசங்களுக்கும் க்ஷேத்திர யாத்திரை செய்து தாம்ரபன்னி தீர்த்தக் கட்டத்தில் நீராடிக்

lic domain. Digitization Muthulakshmi Research Ac

கைலாச நாதரை வணங்கி இம்மை, மறுமை, வீடு என்னும் முத்திறப்பேறும் எய்தலாம். திருக்குற்றாலநாதர் பெருமையை விளக்கும் திருக்குற்றாலத் தலபுராணத்தில் ஒரு திருவிருத்தம் கீழ்க்கண்டவாறு காணப்படுகிறது.

சிவகயிலா யப்பெருமான் செங்கணுன் பதிபிறவும்
சுவகயிலா யங்குளிக்குந் துறையாகி நிறையாழி
உவகையினுர் திருப்பதிகள் ஒன்பதினு நம்பருறை
நவகயிலா யங்களினு நடைபெறுந்தாம் பிரபன்னி.

இப்பாடலினுல் தாம்பிரபன்னி நதிக்கரையிலேயே நவ கைலாசங்களும் உள்ளன என அறியலாம். ஆயினும் உரை யாசிரியர்கள் பிரமதேசம், அரியநாயகிபுரம், சிந்துபூந்துறை, கிழநத்தம், முரப்பநாடு, ஸ்ரீவைகுண்டம், திருப்பேரை, சேர்ந்தமங்கலம், கங்கைகொண்டான் என்பனவற்றை நவ கைலாசங்களாகக் கூறுகிருர்கள். அந்த க்ஷேத்திரங்கள் பற்றி மற்ெருரு வெளியீட்டில் அறிந்து கொள்ளலாம்.

ஸ்ரீ கயிலாயம், திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பொறையுடைய பூமிநீர் ஆனுய் போற்றி
பூதப்படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சின் இடையாய் போற்றி
நீங்காதென் உள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானேர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்டம் உடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 1

முன்பாகி நின்ற முதலே போற்றி
மூவாத மேனிமுக் கண்ணு போற்றி
அன்பாகி நின்ருர்க் கணியாய் போற்றி
ஆறேறு சென்னிச் சடையாய் போற்றி

lic domain. Digitization Muthulakshmi Research Ac

என்பாக வெங்கும் அணிந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
கண்பாவி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 2

மாலை யணிந்த மதியே போற்றி
மன்னியென் சிந்தை இருந்தாய் போற்றி
மேலை வினைகள் அறுப்பாய் போற்றி
மேலாடு திங்கள் முடியாய் போற்றி
ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி
அடியார்கட் காரமுதம் ஆனாய் போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 3

உடலின் வினைக ளறுப்பாய் போற்றி
யொள்ளெரி வீசும் பிரானே போற்றி
படருஞ் சடையின் மதியாய் போற்றி
பல்கணக் கூத்தப் பிரானே போற்றி
சுடரிற் றிகழ்கின்ற சோதீ போற்றி
தோன்றியென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கடலி லொளியாய் முத்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 4

மைசேர்ந்த கண்ட முடையாய் போற்றி
மாலுக்கு மோராழி யீந்தாய் போற்றி
பொய்சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி
போகாதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மெய்சேரப் பால்வெண்ணீ றாடி போற்றி
மிக்கார்க ளேத்தும் விளக்கே போற்றி
கைசே ரனலேந்தி யாடீ போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 5

ஆறேறு சென்னி முடியாய் போற்றி
யடியார்கட் காரமுதாய் நின்றாய் போற்றி
நீறேறு மேனி யுடையாய் போற்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி

lic domain. Digitization Muthulakshmi Research Ac

கூறேறு மங்கை மழுவா போற்றி
கொள்ளுங் கிழமையே ழானாய் போற்றி
காறேறு கண்ட மிடற்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 6

அண்டமே ழன்று கடந்தாய் போற்றி
யாதி புராணனாய் நின்றாய் போற்றி
பண்டை வினைக ளறுப்பாய் போற்றி
பாரோர் விண்ணேத்தப் படுவாய் போற்றி
தொண்டர் பரவு மிடற்றாய் போற்றி
தொழினோக்கி யாளுஞ் சுடரே போற்றி
கண்டங் கறுக்கவும் வல்லாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 7

பெருகி யலைக்கின்ற வாறே போற்றி
பேரா நோய்பேர விடுப்பாய் போற்றி
உருகி நினைவார்தம் முள்ளாய் போற்றி
யூனந் தவிர்க்கும் பிரானே போற்றி
அருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி
யாரு மிகழப் படாதாய் போற்றி
கருகிப் பொழிந்தோடு நீரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 8

செய்ய மலர்மேலான் கண்ணன் போற்றித்
தேடி யுணராமை நின்றாய் போற்றி
பொய்யா நஞ்சுண்ட பொறையே போற்றி
பொருளாக வென்னையாட் கொண்டாய் போற்றி
மெய்யாக வானஞ் சுகந்தாய் போற்றி
மிக்கார்க ளேத்துங் குணத்தாய் போற்றி
கையானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 9

மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி
மேலாடு புரமூன்று மெய்தாய் போற்றி
சீலத்தான் றென்னிலங்கை மன்னன் போற்றிச்
சிலையெடுக்க வாயலற வைத்தாய் போற்றி
கோலத்தாற் குறைவில்லான் றன்னை யன்று
கொடிதாகக் காய்ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையுங் காய்ந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 10

திருச்சிற்றம்பலம்

lic domain. Digitization Muthulakshmi Research Ac

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலும் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

— திருவாசகம்

மண்ணோடு விண்ணளவும் மனிதரொடு வானவர்க்கும்
கண்ணவாய் கண்ணகா தொழிதலும்நான் மிகக்கலங்கி
அண்ணவோ என்றண்ணந் தலமந்து விளித்தாலும்
நண்ணயால் திருத்தில்லை நடம்பயிலு நம்பானே.

—திருவிசைப்பா

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெருத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே

— திருப்பல்லாண்டு

அண்ண லேஎனை ஆண்டுகொண் டருளிய அமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னுல்திருக் கயிலையில் இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்.

வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனஇடப் பாகம்
கொளளு மாமலை யாளுடன் கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனர்.

திருச்சிற்றம்பலம். — பெரியபுராணம்

lic domain. Digitization Muthulakshmi Research Ac

lic domain. Digitization Muthulakshmi Research Ac

ஸ்ரீ முத்துலெட்சுமி, நெல்லை-6.